முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2019 யூலை

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2019 – 07 - 20
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.7*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் குற்றவியல் சட்டத்தின் ஆரம்பநிலை நியாயாதிக்கத்தைக் (Original jurisdiction) கொண்டிருக்கின்ற நீதிமன்றம் எது?

(1) உச்ச நீதிமன்றம்
(2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம்
(4) நீதவான் நீதிமன்றம்

**1.2** இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** அது உத்தியோகபூர்வ தேசிய மொழிகள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்கிறது.

**(b)** அது கொலைக் குற்றத்திற்கான தண்டனைகளை நிர்ணயிக்கிறது.

**(c)** அது அரசியலமைப்புச் சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளைக் கையாள்கின்றது.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்று / கூற்றுகள்:

(1) **(a)** மாத்திரம்
(2) **(b)** மாத்திரம்
(3) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்
(4) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்

**1.3** வட மாகாணத்திலுள்ள சகல காணிகளும் பின்வரும் எந்தச் சட்டத்தினால் ஆளப்படுகிறது?

(1) ரோமன் டச்சுச் சட்டம் (2) ஆங்கிலச் சட்டம்

(3) தேசவழமைச் சட்டம் (4) முஸ்லிம் சட்டம்

**1.4** சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** தனிப்பட்ட / குடும்பச் சட்டமானது பிறப்பு, திருமணம், விவாகரத்து, குழந்தை தத்தெடுத்தல் போன்ற விடயங்களுடன் தொடர்புடையது.

**(b)** வங்குரோத்து அல்லது கையறு (நொடிவு) சட்டமானது கடனைச் செலுத்துவதற்கு இயலாமலுள்ளது என சட்ட முறையாக வெளிப்படுத்துகின்ற நபர்கள் அல்லது வியாபாரங்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்கிறது.

**(c)** ஆதனச் சட்டமானது காணி உரித்து மற்றும் அசையும் சொத்துக்கள், ஈடுகள், குத்தகைகள் போன்றவற்றின் பதிவு தொடர்பான விடயங்களைக் கையாள்கிறது.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்று / கூற்றுகள்:

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேலுள்ள சகலதும்

**1.5** பின்வருவனவற்றுள் ஒப்பந்தமொன்றிலுள்ள உத்தரவாதத்தினை மீறியமைக்கான சரியான பரிகாரமாக இருப்பது எது?

(1) சேதத்திற்கான உரிமைக் கோரிக்கை (claim of damage)

(2) குறித்த செயற்பாட்டுக் கட்டளை (An order of specific performance)

(3) தடை உத்தரவு (An order of injunction)

(4) ஒப்பந்த முடிவுறுத்தல் (Termination of the contract)

**1.6** பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, விற்பனை ஒப்பந்தமொன்று பின்வருவன வற்றுள் எவ்வாறு செய்யப்பட முடியும்?

**(a)** எழுத்தில்

**(b)** வாய்ச் சொல்லின் மூலம்

**(c)** பகுதியளவில் எழுத்திலும் பகுதியளவில் வாய்ச் சொல் மூலமும்

**(d)** தரப்பினர்களின் நடத்தை (conduct of the parties)

மேலுள்ளவற்றுள், சரியான கூற்று / கூற்றுகள்:

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேலுள்ள சகலதும்

**1.7** பின்வருவனவற்றுள் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறையொன்றாக **அமையாதது** எது?

(1) மாற்றுண்டியல் (2) காசோலைகள்

(3) சேகரிப்பு உடன்படிக்கைகள் (4) முற்கொடுப்பனவு

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** காப்புறுதியின் இரண்டு (02) நன்மைகளைக் கூறுக.

**1.9** 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டத்தின் கீழான இரண்டு (02) குற்றங்களைக் கூறுக.

**1.10** தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான ''நோக்கம் (objectivity)'' என்பதனாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**மாயாவின்** புதிய நாவல் ஒன்று 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த சிங்கள நாவலுக்கான விருதை வென்றிருந்தது. பல புகழ்பெற்ற புத்தக வெளியீட்டாளர்கள் இந்த நாவலை வெளியீடு செய்வது தொடர்பில் தங்களது விருப்பத்தினை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவள் விரும்புகிறாள். எவ்வாறாயினும், அவள் **(மாயா)** இத்துறைக்குப் புதியவளாக இருப்பதால், அவள் நாவல் தொடர்பில் தனக்கிருக்கின்ற உரிமைகள் பற்றிய அறிய விரும்புகிறாள்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின்படி, **மாயா** கொண்டிருக்கின்ற பொருளாதார (economic) உரிமை மற்றும் தார்மீக (moral) உரிமை ஆகியவற்றை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 03

**அமரா** தனது காருக்கான காப்புறுதி ஒன்றினை **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** பெறுவதற்கு விரும்பினார். உண்மையில் தனது காரினை தனது வீட்டை ஒட்டிய வீதியோரத்தில் நிறுத்தி வைக்கின்ற **அமரா** காப்புறுதி விண்ணப்பத்தினை நிரப்பும்போது தவறுதலாக, காரானது வளவினுள் உள்ள கார் நிறுத்துமிடத்தில் (கராஜ்) நிறுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஒரு நாள், வீதியோரத்தில் காரை நிறுத்தி வைத்திருந்தபோது கார் சேதமடைந்தது. **அமரா, வரையறுக்கப்பட்ட ABC கம்பனியிடம்** சேதத்திற்கான கோரிக்கையைச் (claim) செய்ய விரும்புகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**அமரா, வரையறுக்கப்பட்ட ABC கம்பனியிடமிருந்து** சேதத்திற்கான நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 04

**சாந்தன்** என்பவர் அண்மையில் காலணிகளைத் தயாரிக்கும் கம்பனி ஒன்றினை ஆரம்பித்த இளம் வணிகர் ஆவார். அவர், தாய்லாந்தைத் தளமாகக் கொண்ட வியாபார நிறுவனமான **''ஸின் ஸின்''** இற்கு காலணிகளை ஏற்றுமதி செய்வதற்கான வியாபார ஒப்பந்தமொன்றை (business deal) ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறார். அவர்கள் CIF (கிரயம், காப்புறுதி, காவுகைக் கட்டணம்) ஒப்பந்தமொன்றின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு இணங்கியுள்ளனர். இது முதலாவது சர்வதேச கொடுக்கல் - வாங்கல் என்றபடியால், **சாந்தன்** CIF ஒப்பந்தத்தின் கீழ், CIF விற்பனையாளர் ஒருவரின் கடமைகளைப் பற்றிய அறிய விரும்புகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

CIF விற்பனையாளர் ஒருவராக அவரின் பிரதான கடமைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

**ராஜாவும் கமணியும்** குழந்தைகளுக்கான ஆடைகளை தயாரிப்பதற்கான பங்குடமை வியாபாரமொன்றினை ஆரம்பித்தனர். அவர்கள் இருவரும் தமது வியாபாரத்தை வளர்ப்பதற்காக கைகோர்த்து உழைத்தனர். எவ்வாறாயினும், **ராஜா** மொத்த விற்பனையாளர் ஒருவரிடமிருந்து கழிவு விலையில் ஆடைகளுக்கான துணியைக் கொள்வனவு செய்திருந்த போதிலும், அதனை அவர் சந்தை விலையில் பங்குடமை வியாபாரத்திற்கு விற்பனை செய்திருந்ததை **கமணி** கண்டுபிடித்தார். இந்தக் கொடுக்கல் வாங்கலிலிருந்து **ராஜா** இரகசிய இலாபத்தினை உழைத்ததுடன் அவர் அதனை **கமணியுடன்** பகிர்ந்து கொள்ளவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இந்த விடயம் தொடர்பில் **கமணிக்கு** உள்ள சட்ட உரிமைகளையும் **ராஜா**வின் கடமைகளையும் **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 06

**பியூமி** மற்றும் **நாமல்** ஆகியோர் நாட்டில் புகழ்பெற்ற தொழில் அதிபரான காலஞ்சென்ற **பெரேரா** அவர்களின் பிள்ளைகளாவர். தற்போது, **பெரேரா**வுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியான, **வரையறுக்கப்பட்ட பெரேரா (தனி) கம்பனியின்** பணிப்பாளர் ஒருவராக **நாமல்** செயற்படு வதுடன், அவர் **வரையறுக்கப்பட்ட பெரேரா (தனி) கம்பனியின்** பணிப்பாளர்களாக **பியூமி** மற்றும் **ஶ்ரீலால்** ஆகியோரை நியமிப்பதற்கு விரும்புகிறார். **பியூமி**யின் வயது 16 வருடங்கள் ஆகும். எவ்வாறாயினும், சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் **ஶ்ரீலால்** காசோலை மோசடி மற்றும் உள்ளகக் கையாளுகை (insider dealing) தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிட்டு, தற்போது பணிப்பாளர்களில் ஒருவராகச் செயற்படுகின்ற **திலக், நாமலின்** தீர்மானத்திற்குத் தனது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**வரையறுக்கப்பட்ட பெரேரா (தனி) கம்பனியின்** பணிப்பாளர்களாக வருவதற்கான **பியூமி** மற்றும் **ஶ்ரீலால்** ஆகியோரின் பொருத்தப்பாட்டினை **ஆராய்க.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**ரஜித** என்பவர் நுகேகொடையில் உணவக வியாபாரம் ஒன்றினை முன்னெடுத்துச் செல்கிறார். இவ்வியாபாரம் **வரையறுக்கப்பட்ட அலினா (தனி) கம்பனியினால்** கொள்வனவு செய்யப்பட்டதுடன் **வரையறுக்கப்பட்ட அலினா (தனி) கம்பனியின்** பொது முகாமையாளராக **ரஜித** நியமிக்கப்பட்டார். எந்தவொரு கடன் அடிப்படையிலான கொள்வனவுகளையும் மேற்கொள்ள வேண்டாமென **ரஜிதவுக்கு** அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வியாபாரத்தின் உரிமை மாற்றப்படுவதற்கு முன்னர் செய்தது போன்று கடன் அடிப்படையில் **வரையறுக்கப்பட்ட லயன்** கம்பனியிடமிருந்து பல வகையான பானங்களைத் தொடர்ந்தும் வாங்கியிருந்தார். **ரஜிதவினால்** செய்யப்பட்ட கடன் அடிப்படையிலமைந்த கொள்வனவுகளுக்கான கொடுப்பனவைச் செய்வதற்கு **வரையறுக்கப்பட்ட அலினா (தனி) கம்பனி** மறுப்புத் தெரிவித்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**வரையறுக்கப்பட்ட லயன் கம்பனிக்குக்** கொடுப்பனவைச் செய்வதற்கு **வரையறுக்கப்பட்ட அலினா (தனி) கம்பனியினால்** மறுப்புத் தெரிவிக்க முடியுமா என்பதை **ஆராய்க.** (10 புள்ளிகள்)

## வினா 08

**தாரா** என்பவர் இலங்கை அரச பல்கலைக்கழகம் ஒன்றில் கல்விசார் ஊழியராக இருந்தார். அவர் பல்கலைக்கழக ஊழியர் ஒருவர் என்ற வகையில் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) உரித்துடையவர் என அவரது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 5 வருட சேவையின் முடிவில், தனது உயர் படிப்பினை மேற்கொள்வதற்காக நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு பல்கலைக்கழகத்திலிருந்து இராஜினாமாச் செய்வதற்கு அவர் தீர்மானித்திருந்தார். அவர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர் தனது ETF இனை பெறுவதற்கு விரும்புகிறார்.

**தாராவின்** கணவரான **சிவா** 10 வருடங்களுக்கும் மேலாக காலணிக் கம்பனியொன்றில் வேலை செய்கிறார். அவர் மாதாந்தம் ரூபா 35,000/- சம்பளத்தில் 2008 மார்ச் 01 ஆந் திகதி அந்தக் கம்பனியில் சேர்ந்திருந்தார். தற்போது அவர் மாதாந்தம் ரூபா 200,000/- இனை சம்பளமாகப் பெறுகிறார். அவரும்கூட **தாராவுடன்** குடிபெயர்வதற்காக 2019 யூலை 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தனது இராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ETF இனைப் பெற்றுக்கொள்வதன் மீது **தாராவுக்குள்ள** உரிமையினை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) இராஜினாமா நேரத்தில் **சிவாவினுடைய** பணிக்கொடை உரித்தினைக் **கணிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**குமார்** என்பவர் ''கணக்கு வைத்திருப்பவர் கணக்கின் ஊடாக மாத்திரம்'' (A/C payee only) என குறிப்பிடப்பட்ட காசோலை ஒன்றை **தேவிகா** என்பவருக்கு வழங்கியிருந்தார். **தேவிகா** அக்காசோலையை வங்கிக் கருமபீடத்தில் (Counter) சமர்ப்பித்து, காசினைக் கேட்டிருந்தார். காசாளர் காசு வழங்க மறுப்புத் தெரிவித்ததுடன் அவருடைய (தேவிகாவினுடைய) வங்கிக் கணக்கில் அதனை வைப்புச் செய்யுமாறு **தேவிகாவுக்கு** ஆலோசனை வழங்கியிருந்தார். காசாளரின் கூற்று தொடர்பில் **தேவிகா** மகிழ்ச்சியடையாத போதிலும் அவர் தன்னுடைய வங்கிக் கணக்கில் காசோலையை வைப்புச் செய்திருந்தார். அதே நேரம், தனது கணக்கின் கீழ் விநியோகிக்கப்பட்ட எந்தவொரு காசோலைக்கும் கொடுப்பனவு செய்ய வேண்டாம் என்ற கட்டளை ஒன்றினை **குமார்** வங்கிக்கு அனுப்பியிருந்தார். அடுத்த நாள், தனது காசோலை தேறியிருக்கவில்லை என்பதைத் **தேவிகா** அறிந்துகொண்டபோது, அவர் வங்கி முகாமையாளரிடம் சென்று **குமாரின்** வங்கிக் கணக்கு மீதி மற்றும் ஏனைய விபரங்கள் பற்றி விசாரித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மாற்றத்தகு சாதனங்கள் (negotiable instruments) தொடர்பில் காசாளரது கூற்றின் செல்லுபடித் தன்மையை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) மேலுள்ள விவரணத்துடன் தொடர்புபடுத்தி வங்கியாளர் ஒருவரின் கடமைகளை **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# பகுதி D

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(A) **சமன்** என்பவர் ஏல விற்பனை ஊடாக தளபாடம் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களை விற்பனை செய்வதற்கென விளம்பரப்படுத்தியுள்ள கொழும்பைத் தளமாகக் கொண்ட ஒரு ஏல விற்பனையாளர் ஆவார். இந்த ஏல விற்பனையில் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த ஒரு தரகர் **கஜன்** ஆவார். எவ்வாறாயினும், பின்னர் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்ட **சமன்** முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையிலிருந்து தளபாடங்களை மீளப் பெற்றிருந்தார். **சமன்** ஒப்பந்தத்தை மீறியுள்ளமை தொடர்பில் **கஜன்** வழக்குத் தொடுக்க விரும்புகிறார். **நிமால்** என்பவர் ஏலவிற்பனையிலிருந்து அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு குருநாகலில் இருந்து வருகை தந்த இன்னுமொரு தரகர் ஆவார். அவர் போட்டோபிரதி இயந்திரம் ஒன்றிற்காக ரூபா 100,000/- விலையினைக் விலைமனுச் செய்திருந்ததுடன் அதே போட்டோபிரதி இயந்திரத்திற்காக **சிதும்** என்ற இன்னுமொரு தரகர் ரூபா 110,000/- விலைமனுச் செய்திருந்தார். இந்த ஏல விற்பனையில் போட்டோபிரதி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு **சிதும்** இனால் இயலுமாக இருந்ததுடன் அவர் அதனை உயர் விலையொன்றிற்கு விற்பனை செய்யவுள்ளதாக அறிவித்திருந்தார். எனவே, **நிமால்** இந்த போட்டோபிரதி இயந்திரத்தை ரூபா 115,000/- இற்கு தனக்கு விற்பனை செய்யுமாறு **சிதுமிடம்** கோரிக்கை விடுத்தார். ஆயினும் இப்போட்டோபிரதி இயந்திரத்தை வாங்க விரும்பினால் ரூபா 120,000/- ஐ செலுத்துமாறு **சிதும் நிமாலிடம்** தெரிவித்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பின்வருவனவற்றை **ஆராய்க**:

(a) **சமன்** மற்றும் **கஜன்** ஆகியோருக்கிடையில் செல்லுபடியான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) **நிமால்** மற்றும் **சிதும்** ஆகியோருக்கிடையில் செல்லுபடியான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(B) **சமீர** என்பவர் குருநாகலில் உள்ள உள்ளூர் பைசிக்கிள் தயாரிப்பாளராவார். அவர் பந்தய பைசிக்கிள்களை தயாரிப்பதில் விசேடத்துவமுடையவர். ‘‘பைசிக்கிள் சட்டகமானது எந்தவொரு காலநிலைக்கும் பொருந்தக்கூடியவாறு இரும்பு மற்றும் அசல் தங்கமுலாம் பூசப்பட்டதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் இருக்கைகள் எந்தவொரு உயரத்திற்கும் சரிசெய்யக் கூடியவாறும் வேகக் கட்டுப்பாட்டுத் தரத்தினை மேம்படுத்துவதற்காக கைபிடி நீள்வட்ட வடிவிலும் தயாரிக்கப்பட்டுள்ளது’’ எனவும் இந்த பைசிக்கிள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இந்த விவரிப்பின் அடிப்படையில், நுவரெலியாவில் வசிக்கின்ற **நுவான்** என்பவர் நுவரெலியாவில் நடைபெறவுள்ள அவரது பைசிக்கிள் பந்தயத்திற்காக பைசிக்கிள் ஒன்றைப் பெறுவதற்கு கட்டளை (order) செய்கிறார். கட்டளை செய்து இரண்டு நாட்களின் பின்னர், **நுவான்** தனது பைசிக்கிளைப் பெற்றுக் கொள்கின்றார். பைசிக்கிளின் கைபிடி மலைப் பகுதியில் ஓடுவதற்கு பொருத்தமற்றதாக இருப்பதையும் இருக்கையைத் தேவையான உயரத்திற்கு சரிசெய்ய முடியாதிருப்பதையும் அவர் கண்டுபிடித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **நுவானுக்கு** இருக்கின்ற உரிமைகளையும் பரிகாரங்களையும் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பொருட்கள் விற்பனைச் சட்டம் தொடர்பில் பின்வரும் பதங்களை **விபரிக்குக**:

(i) தற்போதிருக்கின்ற பொருட்கள் (Existing goods)

(ii) எதிர்காலப் பொருட்கள் (Future goods) (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |